www.Padasalai.Net www.CBSEtips.in

# 10 - STD இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2022

## தமிழ்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு** 14x1=14

1. "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" மாலவன் குன்றமும், வேலவன் குன்றமும் முறையே

(அ) திருப்பதி திருச்செந்தூர் (ஆ) திருப்பதி, திருத்தணி
(இ) திருத்தனி, திருப்பதி (ஈ) திருப்பரங்குன்றம், பழனி

2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொசி கருதியது

(அ) திருக்குறள் (ஆ) புறநானூறு
(இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்

3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருட்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.

(அ) உதியன், சேரவாதன் (ஆ) அதியன், பெருஞ்சாத்தான்
(இ) போகன், கிள்ளிவளவன் (ஈ) நெடுந்ஞ்செழியன், திருமுடிக்காரி

4. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாலினம்

(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

5. ம.பொ. சியின் தன் வரலாற்று நூல்

(அ) என் கதை (ஆ) எனது போராட்டம்
(இ) உள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (ஈ) தன்வாழ்வு

6. வெட்சிப்பூ இவ்வாறு அழைக்கப்படுகிறது

(அ) காகிதப்பூ (ஆ) ஆவாரம்பூ (இ) இட்லிப்பூ (ஈ) வாழைப்பூ

**பின்வரும் பாடலைப்படித்து வினாவிற்கு விடையளி**

**புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது**
**இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது**
**வளமார் கவிகள் வாக்குமூலங்கள்**
**இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு**

7. இப்பாடலை எழுதிய ஆசிரியர் பெயர்

(அ) கு.ப.ரா. (ஆ) கண்ணதாசன்
(இ) தி.சொ.வேணுகோபாலன் (ஈ) பாரதிதாசன்

8. இப்பாடலில் அமைந்த எதுகை நயங்கள்?

(அ) புகழ்ந்தால், புல்லரிக்காது (ஆ) புகழ்ந்தால், இகழ்ந்தால்
(இ) இகழ்ந்தால், இறந்துவிடாது (ஈ) இவை மூன்றும்

9. கவிஞர் தனது வாக்குமூலமாக குறிப்பிடுவது?

(அ) புகழ்தல் (ஆ) இகழ்தல் (இ) கவிதை (ஈ) இறத்தல்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner

[illegible]

(வினா எண். 16 கட்டாயமாக விடையளி)

10. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
11. குறிப்பு வரைக? - துறைமுகம்
12. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்கு சான்று தருக?
13. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக?
14. கலைச்சொல் தருக? அ) Renaissance ஆ) Guild
15. வெண்பாவின் வகைகள் யாவை?
16. 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக?

**III. எவையேனும் 3 வினாவிற்கு விடையளி.** **3 x 3 = 9**

(வினா எண். 20 கட்டாயமாக விடையளி)

17. 'தலையை கொடுத்தால் போதும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக?
18. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி, கட்டைத்தூரிகை - இச்சொற்களை தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க?
19. பின்வரும் குறட்பாவை அலகிடுக?
செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்
20. 'தூசும்' - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக?

**IV. எவையேனும் 2 வினாவிற்கு விடையளி.** **2 x 5 = 10**

21. மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்கிடுக?
22. உங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளை சரிசெய்திடுமாறு மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக?
23. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக?



**V. எவையேனும் 2 வினாவிற்கு விடையளி.** **2 x 6 = 12**

24. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் "மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக?
25. ராஜம் கிருஷ்ணன் குறித்தும் அவரது புதினங்கள் குறித்தும் எழுதுக?
26. 'சுற்றுச்சூழலை பேணுவதே இன்றைய அறம்' - எனும் தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner